**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC **.No.** 139/2026

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 07–ம் தேதி செவ்வாய்க்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 1

**பெயர்** : **கலைபாண்டியன்** **தொழில்** : **ஜேசிபி ஓட்டுநர்**

**த/பெ.** : **கலியபெருமாள்** **வட்டம்** : செந்துறை

**கிராமம்** : பாளையக்குடி **வயது** : 35

07.07.2026

**( எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாளையக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் **ஜேசிபி ஓட்டுநராக** வேலை செய்து வருகிறேன். கடந்த 25.05.2024 அன்று மாலை சுமார் 07.30 மணியளவில் தேளூர் பிரிவு பாதை சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஜெயங்கொண்டம் சாலையில் ஊருக்கு செல்வதற்காக நடந்து சென்று கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த புல்லட் இருசக்கர வாகனம் வேகமாக வந்து என் மீது மோதியதில் இடது கால் முட்டிக்கு கீழ் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் எனது மாமா அண்ணாதுரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. புல்லட் இருசக்கர வாகனத்தை ஓட்டியவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும்.

**(எதிரியை அடையாளம் காட்டவேண்டி அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.